துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் – தொடர் நிகழ்ச்சிகள்!

# சோழவரம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் உணவு - நலஉதவிகள் வழங்கல்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வாழ்த்துரை! டி.ஜே.கோவிந்தராஜன் தலைமை

திருவள்ளூர், நவ.27-

தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் தலைமையில், சிறுபான்மை நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வாழ்த்துரையில், சோழவரம் வடக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் நிகழ்ச்சிகள் சோழவரம் வடக்கு ஒன்றிய செயலாளர் வழுதிகை நா.செல்வசேகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

| எண் | நாள் | நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|---|---|
| 1 | 27-11-2024 புதன்கிழமை | காலை 9.00 | கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல் | அருமந்தை கூட்டுச் சாலை |
| 2 | 27-11-2024 புதன்கிழமை | காலை 10.00 | கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல், ஆட்டோ ஓட்டுநர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் | தச்சூர் கூட்டுச் சாலை |
| 3 | 27-11-2024 புதன்கிழமை | | கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி உணவு வழங்குதல் | வழுதிகைமேடு |
| 4 | 27-11-2024 புதன்கிழமை | | கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி 500 நபர்களுக்கு உணவு வழங்குதல் | செக்கிடி பேருந்து நிலையம் சின்னம்பேடு |
| 5 | 27-11-2024 புதன்கிழமை | | உயர்நிலைப்பள்ளி, தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு கையேடு, கல்வி உபகரணங்கள் வழங்குதல் | சின்னபேடு புது ரோடு கீழ்மேனிபேட்டை |
| 6 | 27-11-2024 புதன்கிழமை | காலை 10.30 | கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி 500 நபர்களுக்கு உணவு வழங்குதல் | மாதவரம் பேருந்து நிலையம் அருகில் |
| 7 | 27-11-2024 புதன்கிழமை | காலை 11.00 | கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி 300 நபர்களுக்கு அசைவஉணவு வழங்குதல் | மாவிளம்பேடு |
| 8 | 28-11-2024 வியாழன் | காலை 8.00 | கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி 300 நபர்களுக்கு காலை உணவு வழங்குதல், பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல் | ஆமூர் காலனி |
| 9 | 28-11-2024 வியாழன் | காலை 10.00 | கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி 200 நபர்களுக்கு காலை பிரியாணி வழங்குதல், | காரிதாஸ் நகர் |
| 10 | 28-11-2024 வியாழன் | | கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி 300 நபர்களுக்கு காலை உணவு வழங்குதல், தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் | ஆமூர் அரசமர அருகில் |
| 11 | 29-11-2024 வியாழன் | | கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி 500 நபர்களுக்கு உணவு வழங்குதல், | ஆண்டர்குப்பம் ஆர்ச் அருகில் |
| 12 | 29-11-2024 வெள்ளி | மாலை 5.00 | கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி 100 மகளிருக்கு புடவை வழங்குதல், அங்கன்வாடி குழந்தைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் | எம்.ஜி.ஆர் நகர் ஆண்டர்குப்பம் |
| 13 | 30-11-2024 சனிக்கிழமை | மதியம் 12.30 | ஆனந்த இல்லம் ஆதரவற்ற குழந்தைகளுக்கு உணவு வழங்குதல் கேக் மற்றும் சாக்லேட் வழங்குதல் | பண்டிக் காவனூர் |
| 14 | 01-12-2024 ஞாயிறு | காலை 10.00 மணி | கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி அறுசுவை உணவு வழங்குதல், | அம்பேத்கர் நகர் வடக்கு நல்லூர் |
| 15 | 01-12-2024 ஞாயிறு | காலை 10.30 மணி | அறுசுவை உணவு வழங்குதல் தூய்மை பணியாளர்களுக்கு அரிசி மளிகைப் பொருட்கள் வழங்குதல் | வில்லிபர் காலனி வடக்கு நல்லூர் |
| 16 | 02-12-2024 திங்கள் | மதியம் | அன்பு மலர் மனவளர்ச்சிக் குன்றிய குழந்தைகளுக்கு உணவு வழங்குதல் | மாபுஸ்கான் பேட்டை |
| 17 | 02-12-2024 திங்கள் | | 300 நபர்களுக்கு உணவு வழங்குதல் அங்கன்வாடி குழந்தைகளுக்கு நலத்திட்டம் | இருளிப்பட்டு |
| 18 | 03-12-2024 செவ்வாய் | காலை 10.00 மணி | கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல், | ஞாயிறு மேல் காலனி |
| 19 | 04-12-2024 புதன் | காலை 10.00 மணி | கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி உணவு வழங்குதல், | பஞ்செட்டி பேருந்து நிலையம் |
| 20 | 05-12-2024 வியாழன் | காலை 9.00 மணி | கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி 300 நபர்களுக்கு உணவு வழங்குதல், | நெடுவரம்பாக்கம் சின்னகாலனி |
| 21 | 05-12-2024 வியாழன் | | 200 நபர்களுக்கு புடவை வழங்குதல், | பெரவள்ளூர் மேட்டு காலனி |
| 22 | 06-12-2024 வெள்ளி | மதியம் 12.00 | கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி உணவு வழங்குதல், | நெடுவரம்பாக்கம் பெரிய காலனி |
| 23 | 07-12-2024 சனிக்கிழமை | காலை 10.00 மணி | கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கிதூய்மை பணியாளர்களுக்கு அரிசி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்குதல் | வேலம்மாள் நகர் மாதவரம் |
| 24 | 08-12-2024 ஞாயிறு | மதியம் 12.00 | கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி 300 நபர்களுக்கு உணவு வழங்குதல், | சீமாபுரம் |
| 25 | 08-12-2024 ஞாயிறு | | 300 நபர்களுக்கு உணவு வழங்குதல், தூய்மை நலத்திட்ட உதவிகள் | பெரவள்ளூர் VAO அலுவலக அருகில் |
| 26 | 09-12-2024 திங்கள் | காலை 10.00 | பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் | வெள்ளி வாயல் |
| 27 | 10-12-2024 செவ்வாய் | காலை 10.00 | இளைஞர்கள் விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் | போந்தவாக்கம் |
| 28 | 11-12-2024 புதன் | காலை 10.00 | மாற்றுத்திறனாளிகள் நலத்திட்ட உதவிகள் | முஸ்லீம் நகர் |
| 29 | 12-12-2024 வியாழன் | காலை 10.00 | பள்ளி மாணவர்களுக்க கல்வி உபகரணங்கள் வழங்குதல் | மாளிவாக்கம் |
| 30 | 13-12-2024 வெள்ளி | காலை 8.00 | கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி காலை உணவு 300 நபர்களுக்கு வழங்குதல், | இனாம் அகரம், ஜெகநாதபுரம் |
| 31 | 13-12-2024 வெள்ளி | | பள்ளி மாணவர்களுக்க நலத்திட்ட உதவிகள் வழங்குதல் | அத்திப்பேடு |
| 32 | 14-12-2024 சனிக்கிழமை | | மாவட்ட அளவிலான மாபெரும் இறுகுப்பந்து போட்டி | சாகர் மேட்மின்டன் அகடமி அழிஞ்சிவாக்கம் |
| 33 | 15-12-2024 ஞாயிறு | | மாபெரும் கிரிக்கெட் போட்டி | நெடுவரம்பாக்கம் |
| 34 | 16-12-2024 திங்கள் | | பள்ளி மாணவர்களுக்கு புத்தகப் பை மற்றும் நல்லத்திட்ட உதவிகள் | சின்ன முல்லைவாயல் |
| 35 | 16-12-2024 திங்கள் | | மாபெரும் மருத்துவ முகாம் | கெங்கையாடிக் குப்பம் |
| 36 | 17-12-2024 செவ்வாய் | | கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி 300 நபர்களுக்கு மதிய உணவு வழங்குதல், | எம்.ஜி.ஆர் நகர் அழிஞ்சிவாக்கம் |
| 37 | 18-12-2024 புதன் | | 200 மகளிருக்கு புடவை வழங்குதல் | அண்ணாநகர், பண்டிக் காவனூர் |
| 38 | 18-12-2024 புதன் | மாலை | எளியோர் எழுச்சி நாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் | மாதவரம் பேருந்து நிலையம் |
| 39 | 19-12-2024 வியாழன் | | 500 நபர்களுக்கு மதிய உணவு வழங்குதல், அங்கன்வாடி குழந்தைகளுக்கு நலத்திட்ட உதவிகள் | கொடிப்பள்ளம் திருநிலை |
| 40 | 20-12-2024 வெள்ளி | | மண்பாண்ட கலைஞர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் | போந்தவாக்கம் |
| 41 | 21-12-2024 சனி | | கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி 300 நபர்களுக்கு காலை உணவு வழங்குதல், | போரக்ஸ் நகர் ஆண்டார்குப்பம் |
| 42 | 22-12-2024 ஞாயிறு | | மாபெரும் கேரம் போட்டி | தச்சூர் கூட்டுச்சாலை |
| 43 | 23-12-2024 திங்கள் | | பள்ளி மாணவர்களுக்கு புத்தக பை மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்குதல் | ஆண்டார்குப்பம் தொடக்கப்பள்ளி |
| 44 | 24-12-2024 செவ்வாய் | | கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி 200 மகளிருக்கு புடவை வழங்குதல், | வைரவன் குப்பம் |
| 45 | 25-12-2024 புதன் | | கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், | விச்சூர் |
| 46 | 26-12-2024 வியாழன் | | 300 நபர்களுக்கு பிரியாணி வழங்குதல் | பசுவன் பாளையம் |
| 47 | 27-12-2024 வெள்ளி | | அங்கன்வாடி குழந்தைகளுக்கு நலத்திட்ட உதவிகள் | பெருஞ்சேரி |
| 48 | 28-12-2024 சனி | | மாபெரும் கைப்பந்து போட்டி | அத்திப்பேடு |
| 49 | 29-12-2024 ஞாயிறு | | மாபெரும் கிரிக்கெட் போட்டி | நத்தம் |
| 50 | 29-12-2024 ஞாயிறு | | மாபெரும் கிரிக்கெட் போட்டி | தச்சூர் |
| 51 | 30-12-2024 திங்கள் | | 200 மகளிருக்கு புடவை வழங்குதல் | பெரிய முல்லைவாயல் |

**வழுதிகை நா.செல்வசேகரன்**
சோழவரம் வடக்கு ஒன்றிய செயலாளர்

பல மாவட்டங்களுக்கு கன மழை முதல் அதி கனமழை எச்சரிக்கை!

# வங்கக் கடலில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம்!

## மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் - வருவாய்த்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் ஆய்வு!

சென்னை, நவ.27-

வங்கக் கடலில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளதை அடுத்து பல மாவட்டங்களுக்கு கனமழை முதல் அதி கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதையடுத்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

அதன் விவரம் வருமாறு:-

வங்கக் கடலில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நிலவுகிறது என்றும், இது 27.11.2024 அன்று புயலாக மாற வாய்ப்புள்ளது என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும், கடலோர மாவட்டங்களுக்கு கனமழைக்கான வாய்ப்புள்ளது. இதனைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள் நேற்று (26.11.2024) காலை 11.45 மணிக்கு நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்ட ஆட்சியர்களுடன் காணொலி வாயிலாக ஆய்வு மேற்கொண்டு ஆயத்த நடவடிக்கைகள் குறித்து அறிவுரை வழங்கினார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன் நேற்று (26.11.2024) மாலை 4.30 மணியளவில் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு வருகை புரிந்து கனமழை எச்சரிக்கை தொடர்பாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை ஆய்வு செய்து அறிவுரைகளை வழங்கினார்.

**ரெட் அலர்ட்**

நேற்று (26.11.2024) திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களில் 20 செ.மீட்டருக்கு மேலாக அதிகனமழை பெய்யக்கூடும் என்றும், 27.11.2024 அன்று மயிலாடுதுறை, கடலூர் ஆகிய மாவட்டங்களில் 20 செ. மீட்டருக்கு மேலாக அதிகனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நேற்று (26.11.2024) காலை 8.30 மணியிலிருந்து மாலை 4.30 மணி வரை சராசரியாக நாகப்பட்டினம் 6.7 செ.மீ., சென்னை 4.1 செ.மீ., செங்கல்பட்டு 3.1 செ.மீ., திருவாரூர் 4.4 செ.மீ., தஞ்சாவூர் 2.5 செ.மீ., மயிலாடுதுறை 3.4 செ.மீ., மழை பெய்துள்ளது.

குறிப்பாக, சென்னை கடப்பாக்கம் 11.2 செ.மீ., இடையாஞ்சாவடியில் 8.9 செ.மீ., அவ்வை நகர் பகுதியில் 7 செ.மீ., பள்ளிக்கரணை 7 செ.மீ., செங்கல்பட்டு தாம்பரம் பகுதியில் 8.4 செ.மீ., திருவள்ளூர் செங்குன்றம் 5.1 செ.மீ., திருவெள்ளைவாயல் 5.6 செ.மீ., மயிலாடுதுறை தரங்கம்பாடி 8.9 செ.மீ., மதானம் 5.9 செ.மீ., திருவாரூர் கமலாபுரம் 7.9 செ.மீ., லக்ஷ்மன்குடி 7.3 செ.மீ., தலையமங்கலம் 7.6 செ.மீ., நாகப்பட்டினம் வேளாங்கன்னி 11 செ.மீ., தோப்புத்துறை 5.9 செ.மீ., நாலுவேதபதி 8.8 செ.மீ., தேவூர் 8.3 செ.மீ., தகட்டூர் 8.2 செ.மீ., தெற்கு பொய்கைநல்லூர் 8.6 செ.மீ., தஞ்சாவூர் - திருமங்கலக் கோட்டை மலையூர் 5.84 செ.மீ., மழை பதிவாகியுள்ளது.

**நிவாரண முகாம்கள்**

கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் 1634 நிவாரண மைய கட்டடங்கள் தயாராக வைக்கப்பட்டுள்ளன. இதுவரை எந்த மாவட்டத்திலும் நிவாரண முகாம்கள் செயல்படும் நிலை ஏற்படவில்லை.

**மீனவர்கள்**

மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்க மீன்வளத் துறை இயக்குநருக்கும், கடலோர மாவட்ட ஆட்சியர்களுக்கு 23.11.2024 அன்று அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

கடலில் மீன்பிடிக்கச் சென்ற 2527 விசைப் படகுகளும், 1206 நாட்டுப் படகுகளும் கரை திரும்பியுள்ளன.

ஆழ்கடலில் மீன் பிடிக்கச் சென்றுள்ள படகுகள் அருகில் உள்ள துறைமுகங்களுக்குச் செல்ல மீனவர்களுக்கு தகவல் அளிக்கப்பட்டுள்ளது.

**கண்காணிப்பு அலுவலர்கள்**

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மாவட்ட நிருவாகத்துடன் ஒருங்கிணைந்து கண்காணித்திட நாகப்பட்டினம் - ஜானி டாம் வர்கீஸ், மயிலாடுதுறை - திருமதி. கவிதா ராமு, திருவாரூர் திருமதி. காயத்ரி கிருஷ்ணன், கடலூர் எஸ்.எ. ராமன், ஆகிய மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் விரைந்துள்ள னர்.

தாழ்வான பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் மாவட்ட நிருவாகத்தின் அறிவுரையின் பேரில் நிவாரண முகாம்களுக்கு செல்லுமாறும், மறு அறிவிப்பு வரும் வரை மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இந்த ஆய்வின் போது, கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் ராஜேஷ் லக்கானி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலர் திருமதி பெ. அமுதா, மற்றும் பேரிடர் மேலாண்மை இயக்குநர் வ. மோகனச்சந்திரன் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு:

# தாம்பரம் மேற்குப் பகுதியில் நல உதவிகள் வழங்கல்!

## பகுதிச் செயலாளர் எஸ்.இந்திரன் அறிக்கை!

தாம்பரம், நவ.26-

தாம்பரம் மேற்குப் பகுதி கழக செயலாளர் எஸ்.இந்திரன் அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தாம்பரம் மேற்குப் பகுதிக்கு உட்பட்ட 62வது வட்டத்தில் காலை 8.00 மணி அளவில் பழைய ஜி. எஸ்.டி. ரோடு இரும்புலியூர் கிழக்கு தாம்பரத்தில் கழக கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கி சிற்றுண்டி வழங்க இருக்கிறார்கள்.

அதனை தொடர்ந்து 63-வது வட்டத்தில் காலை 8.15 மணியளவில் பலராமன் தெரு சந்திப்பில் கழக கொடியேற்றி பொதுமக்களுக்கு சிற்றுண்டி வழங்கயிருக்கிறார்கள்.

48வது வட்டத்தில் காலை 8.30 மணி அளவில் கிழக்கு தாம்பரம் பாரத மாதா தெருவில் கழகக் கொடியேற்றி சிற்றுண்டி வழங்கி ஏழை எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், 47வது வட்டம் காலை 8.45 மணியளவில் ஏரிக்கரை தெரு பாரத மாதா தெரு சந்திப்பில் கழக கொடி ஏற்றி இனிப்புகள் வழங்க இருக்கிறார்கள்.

45வது வட்ட திமுக சார்பில் காலை 9 மணி அளவில் கேம்ப் ரோடு ஜங்ஷன் வேளச்சேரி மெயின் ரோட்டில் துப்புரவு தொழிலாளர்களுக்கும் ஏழை எளியவர்களுக்கும் அரிசி கோதுமை மாவு மற்றும் ஹார்ட் பாக்ஸ் வழங்க உள்ளார்கள்.

மேலும் 64வது வட்டத்தில் 9.15 மணி அளவில் வேளச்சேரி மெயின் ரோடு கேப்டன் கார்னரில் புதிய கம்பம் அமைத்து கழக கொடியேற்றி சிற்றுண்டி வழங்க உள்ளனர்.

தாம்பரம் மேற்கு பகுதி கழக சார்பில் சரியாக 9:30 மணி அளவில் கிழக்கு தாம்பரம் வேளச்சேரி மெயின் ரோடு Christking Convent பஸ் ஸ்டாப் அருகில் கழக கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கியும் ஏழை எளியோர்க்கு நலத்திட்டங்கள் உதவிகள் வழங்கி எழுச்சியோடு கொண்டாட உள்ளோம்.

இந்நிகழ்வில் பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர், நிர்வாகிகள் பகுதிக்குட்பட்ட மாவட்ட, மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி மற்றும் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பிக்குமாறு பகுதிச் செயலாளர் எஸ்.இந்திரன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஏ.எம்.வி. பிரபாகரராஜா - க.தனசேகரன் காசி முத்துமாணிக்கம் - கே.கண்ணன் வே.உமாகாந்த் பங்கேற்பு

# 137 ஆ வட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## அ.கதிரேசன் தலைமையில் கொடியேற்றி இனிப்பு வழங்குதல்!

சென்னை, நவ. 27 -

மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியம் ஆலோசனைப்படி கலைஞர் நகர் தெற்கு பகுதி 137 ஆ வட்ட கழகத்தின் சார்பில் துணை முதல்வர் உதயநிதி பிறந்த நாளை முன்னிட்டு இன்று ) 27.11.2024 காலை 09:00 மணிக்கு எம்ஜி ஆர் நகர் அஜந்தா பேருந்து

நிலையம் அருகில் கழக கொடி ஏற்றி இனிப்புகளை வழங்கி கொண்டாடப்படுகிறது.

இ ந் நி க ழ் ச் சி யி ல் பிரபாகராஜா எம்.எல்.ஏ. சென்னை மாநகராட்சி கணக்கு மற்றும் தணிக்கை குழு தலைவர் க.தனசேகரன், வர்த்தக அணி செயலாளர் காசி முத்துமாணிக்கம், பகுதி கழக செயலாளர் கே.கண்ணன, தொகுதி மேலிடப் பார்வையாளர் வே.உமாகாந்த், உ.துரைராஜ், பி.எஸ் முருகேசன், எஸ்.டி தங்கராஜ், மாவட்ட துணைச் செயலாளர் வாசுகி பாண்டியன், மாவட்ட அமைப்பாளர்கள் சசிகுமார், நிஷா சையத், கனிமொழி தனசேகரன், பகுதி கழக நிர்வாகிகள் அஜந்தா ரவி, உமாபதி, எஸ் தியாகு,பாபு, மாவட்ட பிரதிநிதி ஏ.கே. ரவி,

வட்டக் கழக அவைத்தலைவர் என்.சக்கரவர்த்தி, துணைச் செயலாளர்கள் தணிகாசலம், செல்லா,ராஜேஸ்வரி, வட்ட கழக பொருளாளர் டைகர் பழனி, பகுதி பிரதிநிதிகள் B. தனசேகர், என்.ஜெகதீசன், சே.சதீஷ், நா.பாலா, எஸ்.புகழ் பி.பெரியசாமி, ஜெ.சீனிவாசன், முகமது ரியாஸ்,

மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் , பகுதி கழக நிர்வாகிகள் , வட்ட கழக

நிர்வாகிகள்,பாகத்தலைவர்கள் கழக முன்னோடிகள் மற்றும் மகளிர்கள் திரளாக கலந்துகொள்ளுமாறு வட்டச் செயலாளர் அ.கதிரேசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

அமைச்சர் மா. சுப்பிரமணியன், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. பங்கேற்பு

# சோழிங்கநல்லூர் மத்திய பகுதி சார்பில் உதயநிதியின் உதயநாள் விழா!

## பகுதி செயலாளர் ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, நவ. 27 -

சோழிங்கநல்லூர் மத்திய பகுதியில் கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள் இன்று பின்வரும் விவரப்படி நடைபெறுகிறது.

189 -வது வார்டு ,பள்ளிக்கரணை வார்டு அலுவலகம் அருகில் கழக இருவண்ணக் கொடி ஏற்றி காலை சிற்றுண்டி வழங்குதல் தலைமை - வ.பாபு எம்.சி. (189வது வட்ட செயலாளர்)

190 -வது வார்டு பள்ளிக்கரணை- கண்ணபிரான் கோவில் தெரு, அம்பேத்கார் பூங்காவில் கழக இருவண்ணக் கொடி ஏற்றி மாணவர்களுக்கு நோட்டுபுத்தகம் வழங்குதல். தலைமை எஃப். ஆரோன் அரசு (190 வட்ட செயலாளர்)

191-வது வார்டு ஜல்லடியன் பேட்டை - பழண்டியம்மன் கோவில் அருகில் கழக இருவண்ணக் கொடி ஏற்றி இனிப்பு மற்றும் காலை சிற்றுண்டி வழங்குதல். தலைமை G.ரவி (191 வட்ட செயலாளர்)

197-வது வார்டு உத்தண்டி பனையூர் - உத்தண்டிபனையூர் சிக்னல் மற்றும் மாடல் லேவுட் ஆகிய பகுதிகளில் கழக இருவண்ணக் கொடி ஏற்றி இனிப்பு வழங்குதல். தலைமை T.ராஜேந்திரன் ( 197 வட்ட செயலாளர்)

198-வது வார்டு காரப்பாக்கம்/ சோழிங்கநல்லூர் - காரப்பாக்கம் ஈஸ்வரன் சாலையில் உள்ள All the Children சிறப்பு குழந்தைகள் காப்பகத்தில் இரவு உனவு வழங்குதல். தலைமை பா.தேவகுமார் (198 வட்ட செயலாளர்)

199 -வது வார்டு சோழிங்கநல்லூர் - சோழிங்கநல்லூர் MGR தெரு, சத்யவாணி முத்து தெரு, பொன்னியம்மன் கோவில் தெரு 80அடி சாலை ஆகிய பகுதிகளில் கழக இருவண்ணக் கொடி ஏற்றி இனிப்பு & காலை சிற்றுண்டி வழங்குதல். தலைமை G.சங்கர்.எம்.சி. (199 வட்ட செயலாளர்)

200 -வது வார்டு செம்மஞ்சேரி - OMR ராஜீவ் காந்தி சாலை செம்மஞ்சேரியில் கழக இருவண்ணக் கொடி ஏற்றி இனிப்பு & காலை உணவு மற்றும் தலைமை R.நாகராஜ் (200 வட்ட செயலாளர்)

மதியம் 12மணியளவில் செம்மஞ்சேரி சுனாமி நகர் MCDC மனவளர்ச்சி குன்றிய சிறப்பு குழந்தைகளுக்கு மதிய உணவு பிரியாணி வழங்குதல்.

இந்நிகழ்ச்சியில் சோழிங்கநல்லூர் மத்திய பகுதிக்குட்பட்ட பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட, பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமேன சோழிங்கநல்லூர் மத்திய பகுதி செயலாளர் ச. அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. கேட்டுக்கொண்டுள்ளார்.



பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்களை, பிரிட்டிஷ் துணை உயர் ஆணையாளர் (Ms. Halima HollandBritish Deputy High Commissioner) அவர்கள் நேற்று (25.11.2024) கட்டட அலுவலகத்தில் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.